(இ) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) முதல், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளை டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புடன் ஒன்றாக இணைக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, முதலிலேயே நான் அதைத் தான் கேட்டேன். இரண்டாவது நிலையில், செகண்ட் கிளாஸ் நிலையில் உள்ள மாஜிஸ்டிரேட்டுகள் அனைவருமே பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் ஏற்கெனவே கேள்வி கேட்டுவிட்டார்கள். நானும் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கின்றேன். சப்-மாஜிஸ்டிரேட்டுகள் எல்லாம் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகளாக இருக்கின்றார்கள். எஸ். டி. எம். எல்லாம் முனசீப் கேடர். அவர்களுக்கு பர்ஸ்ட் கிளாஸ் பவர்ஸ் கொடுக்கப்பட்டிருக் கின்றன. ஜுடிசியல் சப்-மாஜிஸ்ட்ரேட் என்று சாதாரணமாகச் சொல்லப் படுகின்ற நண்பர்கள் எல்லாம் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கேடருக்கு மாற்றப்பட வேண்டும் என்பதுதான் ப்ரபோஸல். அதற்காகத்தான் இன்ட்டெக்ரேஷன் என்பது. ஜுடிசியல் சப்-மாஜிஸ்ட்ரேட், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் இவர்கள் இரண்டு பேர்களையும் ஒரே கேடராக்கி விட்டபின் டிஸ்ட்ரிக்ட் முன்சீப்-கம்-சப்-மாஜிஸ்ட்ரேட் என்ற அளவுக்கு அவர்களுக்கு அதிகாரம் வரும். இதுதான் இப்போது பரிசிலனையில் இருக்கிறது.

Surplus Paddy in Kanyakumari District

* 177. *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any representation has been received to the effect that foodgrains should be distributed to the poor people in Agastheeswaram and Thovalai Taluks, Kanyakumari District through ration cards after the procurement of surplus paddy in those areas by the Government during 1974 ; and

(*b*) if so, the action taken thereon by the Government?

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள உபரி நெல்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அகஸ்தீஸ்வரம், தோவாளை தாலுக்காக்களில் 1974 ஆம் ஆண்டு உபரி நெல்லை விதிப்பு நெல்லாக அரசு வாங்கியபின் அங்கு வாழும் ஏழை மக்களுக்கு பங்கீட்டு அட்டைகள் மூலம் உணவு தானியம் வழங்க வேண்டுமென்று முறையீடு ஏதும் வந்ததுண்டா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) அகஸ்தீஸ்வரம், தோவாளை வட்டங்கள் அடங்கிய பகுதி, கட்டுப்பாடற்ற பகுதி வரையினுள் வருகிறது. இப்பொழுது, அப்பகுதியில் அரிசி, நெல், கொண்டுபோகவும், விற்கவும் தடை ஏதும் இல்லை. மேலும் அப்பகுதி உபரி விளைச்சல் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே தற்போதைக்கு இப்பகுதியில் நியாயவிலைக் கடைகள் துவங்க வேண்டிய அவசியமில்லை. இருப்பினும் 18-1-75-முதல் நாகர்கோவில், பத்மநாபபுரம் நகரங்களிலும் 7-2-1975 முதல் மீனவர் வாழும் கடலோர கிராமங்கள் 17-லும் மாத வருமானம் ரூ. 500-க்கு கீழுள்ள குடும்பங்களுக்கு வாரந்தோறும் மூன்று கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, தோவாளை, அகஸ்தீஸ்வரம தாலுக்காவில் லெவி முறை விதிக்கப்பட்டதால் உபரி நெல்களெல்லாம் எடுக்கப்பட்டுவிட்டன. மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பாக இந்த இரண்டு தாலுக்காக்களிலும், லெவி கூடுதலாக இருக்கின்றது. இதிலே அமைச்சர் அவர்கள் அறிவித்ததுபோல அல்லாமல், போக்குவரத்தும் தடை செய்யப்பட்டிருக்கின்றது. எனவே அங்கே இருக்கக்கூடிய நிலையில் அங்கே நிலமே இல்லாதவர்களுக்கும் குத்தகைப் பயிர் கூட செய்யாமல் இருக்கின்ற மற்றவர்களுக்கும் அறுவடை காலத்திற்குப் பிறகு ஒரு மாதம் கழித்தாவது கார்டு மூலம் அரிசியும் கோதுமையும் வழங்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து மாவட்ட ஆட்சித் தலைவரவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

Hostels for Harijan and Backward Class Students

* 178 Q.—Thiru M. SANKARALINGAM (on behalf of Thiru V. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether arrangements have been made to supply food-grains to the Hostels for Harijan and Backward Class Students in Tamil Nadu at fair prices ; and

(*b*) if so, the number of Hostels for which such arrangements have been made?